(வானுறையும் தெய்வமாகிவிட்ட)

# அமரர்.
# திருமதி. புவனேஸ்வரி விநாயகப்பிள்ளை

(ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர் - ISA)

அவர்களின் . .



# 31ஆம் நாள் நினைவு மலர்

13-07-2018

வீரமுனை - கல்முனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரமுனையைப்

பிறப்பிடமாகவும்

கல்முனையை வாழ்விடமாகவும்

கொண்டு

13-06-2018 இல்

இறைபதம் எய்திய எங்களின்

அன்புத்தெய்வம்





**அமரர்.**

**திருமதி. புவனேஸ்வரி விநாயகப்பிள்ளை**

அவர்களின் நினைவாக

13-07-2018 அன்று

## முப்பத்தோராம் நினைவு நாளில்

குடும்பத்தினரால் இம் மலர்

வெளியிடப்பட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சமர்ப்பணம்

எங்கள் அன்புத் தெய்வமாய்..,
பாசத்தின் பதியாய்
அன்புடன் எமை அரவணைத்து
இன் முகத்துடன் பண்பாளராகி
மாண்புடன் வாழ்ந்து

வானுறையும் தெய்வமாகி விட்ட
எங்களின் அன்புத் தெய்வத்தின்
திருப் பாதங்களுக்கு
இந்நூல் சமர்ப்பணம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யுகங்களாய் கழிந்த வினாடிகள்

## அந்தக் கொடூர இரவு . . .

1984ம் ஆண்டு ஆண்டவனால் சிருஷ்டிக்கப்பட்ட குடும்பம் என்ற வண்டியில் பூட்டப்பட்டோம். வீரமுனையில் வசதியாக வாழக்கூடிய வாய்பிருந்தும் நாணமடுப் பாடசாலைபற்றியும், அக்கிராமத்தைப் பற்றியும், எனக்கிருந்த கற்பனைகளையும் நிறைவேற்ற வேண்டுமென்றால் அக்கிராமத்தில் தான் வசிக்கவேண்டும், என்ற எனது கோரிக்கையை ஏற்று எனது தாய் வீட்டில் வசிக்க சம்மதித்து என்னுடன் வந்தாய். சந்தோசமாக வாழ்ந்தோம். மகளையும் பெற்றாய் மகள் அப்பம்மாவோடு செல்லமாக வளர்தாள். 1990 இல் ஏற்பட்டசம்பவம் அனைத்தையும் இழந்து ஒவ்வொருவரும் திக்குத் தெரியாமல் ஓடினோம்.

நாம் 1990ல் கல்முனையை நோக்கிநகர்ந்தோம். முடிந்தளவு சந்தோசமாக வாழ்ந்தோம். குடும்பம் எமக்குச் சுமையாகத் தெரியவில்லை. குடும்ப பொறுப்பையும் ஏற்றுக் கொண்டாய். நான் சிட்டாக சிறகடித்துப் பறந்து திரிந்தேன். நீ நித்திரைக்குச் சென்றதையும், நித்திரை விட்டு எழுந்ததையும் கண்ட நாட்கள் மிகக்குறைவு.

1991ம் ஆண்டு நமக்கு மிகக் கஷ்டமான வருடமாக அமைந்தது. மகளை வயிற்றில் சுமந்தாய் நோய்வாய்ப் பட்டாய் வைத்தியசாலையும், வீடுமாக அலைந்தோம். தாய், தந்தை, சகோதரங்கள் எல்லாம் கூட இருந்து ஆறுதல் சொல்லி அரவணைக்க வேண்டிய காலத்தில் தனியாகக் கஷ்டப்பட்டோம். அது அந்தக் கால சூழல் நமக்குச் செய்த சதி, உனக்கு நான் எனக்கு நீ இருவருக்கும் இறைவன் அருளால் மறு பிறவி எடுத்தாய். மகனை அம்மப்பா அருமையாக வளர்த்துத் தந்தார். பிள்ளையைப் பெற்றால் கண்ணீர் தென்னையை வைத்தால் இளநீர். பிள்ளையும் பெற்றாய் தென்னையையும் வைத்தாய் ஆனந்த கண்ணீரை உன் கண்ணில் கண்டேன். பேரனையும் கண்டாய் பேரனோடு சுற்றிச் சுற்றி வந்தாய். பேரனுக்கு விதம் விதமாய் உணவூட்டினாய் அம்மம்மா என்று உன்னையே சுற்றிச் சுற்றி வந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரனுக்கு . . பேரனுக்கு என்று எல்லாவற்றையும் வாங்கினாய் ஆனந்தத்தில் மூழ்கினாய். இப்போது அவன் அம்மம்மா என்று அழைக்கும் போது என் இதயத்தைப் பிழிந்தெடுப்பதை நீ அறிவாயா?

2016ம் ஆண்டுக்கிடையில் எனக்கு 2018ம் ஆண்டு திமீர் மரணம் நிகழும் என்று கூறினாய். இதை நீ அடிக்கடி சொல்லத் தொடங்கினாய். மரணம் நாம் நினைத்தபடி நடப்பதில்லை அடுத்த நிமிடமே மரணம் வரலாம். அதைப்பற்றிக் கவலைப்படுவது மடத்தனம் என்று நான் உன்னை அதட்டியிருப்பேன். ஆனால் நான் உள்ளுக்குள்ளே பயந்தேன், வேதனைப்பட்டேன் வெளிக்காட்ட முடியாமல் தவித்தேன். மகனுடைய பேரப்பிள்ளையையும் கண்டபின் எனது மரணத்துக்குப் பின்புதான் நீ இறப்பாய் என்று சொன்னது எவ்வளவு போலித்தனம். மகனின் சிறப்பைக் கூட கானாமல் காலன் உன்னை கவர்ந்து விட்டான் என்னகொடுமை.

2018-06-12ம் திகதி அந்த கரிநாள் வருத்தத்தின் வலியை தாங்குவதில் உனக்கு நிகர் நீதான். அன்று காலை எனக்கு வயிற்றை வலிக்கிறது வைத்தியசாலைக்குப் போவோம் என்று நீ கூறியதும் வருத்தத்தின் தன்மையை நான் அறிந்து கொண்டேன். எனக்கு வருத்தம் வந்தால் என்னை அரசாங்க ஆஸ்பத்திரி வாட்டில் வைக்கக் கூடாது என்று எப்போதுமே சொல்லுவாய். ஏனென்றால் அரசவைத்தியசாலையில் நான் உன்னோடு நிற்கமுடியாது என்பதற்காகத் தான். உனக்குச் சத்திரசிகிச்சையையும் தனியார் வைத்திசாலையில் தானே செய்தாய் நான் தானே கூட இருந்து உன்னைப் பராமரித்தேன்.

ஆனால் அன்று காலையில் உரியவைத்தியர் இல்லாததால் தனியார் வைத்தியசாலைக்கு கொண்டு போக முடியாமல் போய் விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின் உன்னை கல்முனை அரச வைத்தியசாலையில் அனுமதித்து பின்நேரம் 4.00மணிக்கு மட்டக்களப்பு தனியார் வைத்தியசாலைக்கு கொண்டுபோன போது உடனடியாக மட்டக்களப்பு அரச வைத்தியசாலையில் வைக்குமாறு வைத்தியர் சொன்னபோது உன் விருப்பத்திற்காக தனியார் வைத்தியசாலையிலே அன்று இரவு சிகிச்சை பெற்றோம்.

வருத்தம் வந்தால் நான் உன் கூட நிற்க வேண்டுமென்ற உன் விருப்பப்படியே இருவரும் அந்தக் கொடிய இரவைக் கழிக்க வேண்டியதாயிற்று. வலிகூடத் தொடங்கியது. தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டது. வலிவரும் போதெல்லாம் வைத்தியரை அழைத்து சிகிச்சை அளிக்கச் சொன்னேன். வேண்டாம் அவர்களைக் கஷ்டப்படுத்தாதீர்கள் என்று எனக்கு ஏசினாய். இல்லை வைத்திய வசதி இருக்கும் போது வலியோடு இருக்கக்கூடாது என்று சொன்னேன். விடிய விடிய வைத்தியரையும் ஊழியரையும் தூங்க விடாமல் பண்ணினேன். உனக்கு வியர்வையாக இருந்தது. AC ஓடர் பண்ணலாம் என்று சொன்னேன். வீண் செலவு வேண்டாம் என்று சொன்னாயே. இந்த நிலையிலும் சிக்கனமாகவே இருந்தாய். சிக்கனத்தை உலகம் உன்னிடம் கற்றுக்கொள்ள வேண்டும்.

எனது வாழ்க்கையில் ஏற்பட்ட அந்த கொடூரமான அந்த இரவு வினாடிகள் யுகங்களாகக் கழிந்து கொண்டிருந்தது. இரவு மரிப்பவர்களுக்கு குடல்தான் முதலில் சாகும் என்று அம்மம்மா சொல்லுவார். எனக்கும் குடல் செத்துவிட்டது என்று சொன்னாயே. எனக்கு அந்த வினாடி எப்படியிருந்நது என்று தொரியுமா? நான் இறந்த பிறகுதான் நீ இறப்பாய் நான் இன்னும் சாகவில்லை நீ சாகமுடியாது என்று நான் சொன்ன போது மடயா என்று எக்காளமிட்டு சிரித்தாயா? 12மணித்தியாலங்கள் ஒரு இரவு நீ மரணப்படுக்கையில் தான் இருந்திருக்கிறாய் என்பதை பிறகுதானே உணர்ந்தேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணப்படுக்கையில் இருக்கும்போது பிள்ளைகளைப்பற்றி, சொத்துக்களைப்பற்றி சிலபேர் இப்படித்தான் செய்ய வேண்டுமென்று சொல்லுவார்கள். ஆனால், நீ எதையும் சொல்லவில்லை நான் எதையும் சரியாகச் செய்வேன் என்ற நம்பிக்கையா? எனக்கு புரியாத புதிராக இருக்குதம்மா.

உன்னுடைய மரணத்தில் ஆண்டவன்பக்கம் நியாயமிருப்பதாக நான் உணர்கிறேன். 34 வருட நமது இல்லற வாழ்க்யையில் குடும்பப் பொறுப்பு சகலதையும் நீயே ஏற்றுக் கொண்டாய்.

நீ உயிரோடிருந்திருந்தால் அதில் இருந்து ஓய்வு பெறப்போவதுமில்லை என்பதற்காக நிரந்தர ஓய்வை இறைவன் உனக்கு வழங்கி நீயும் சொஞ்சம் பொறுப்பை ஏற்றுப் பாரடாமடையா என்று இறைவன் என்னைத் தண்டித்து உன்னைப் பூவோடும் பொட்டோடும் சுமங்கலியாக எடுத்துக் கொண்டான். நீ பாக்கியசாலி, புண்ணியவதி, நான் திக்குத் தொரியாத காட்டில் சிக்கித் தவிக்கிறேன்.

மனிதன் பிறந்தான், வாழ்ந்தான், மடிந்தான் உன்னுடய மரணமும் சிலருக்காவது சில செய்திகளைச் சொல்லுமம்மா.

உன் ஆத்மா நிச்சயமாக சாந்தியடையும், அதற்காக இறைவனை நான் பிரார்த்திக்கின்றேன். நிரந்தர ஓய்வில் நிம்மதியாக இருந்து உனது பிள்ளைகளுக்கும், மருமகனுக்கும், பேரனுக்கும் தெய்வமாக இருந்து வழிகாட்ட வேண்டுமென்று உன்னைப் பிரார்த்திக்கின்றேன்.

அன்புக் கணவர்

**ஆ. விநாயகப்பிள்ளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர். திருமதி. புவனேஸ்வரி விநாயகப்பிள்ளை அவர்களுக்காக . . .

எங்கள் வாழ்க்கையில் பல மனிதர்களை சந்திக்கின்றோம், பேசுகின்றோம், பழகுகின்றோம் ஆனால் அவ்வாறானவர்களில் ஒரு சிலர் மாத்திரமே எமது மனங்களிலே இடம் பிடித்து விடுகின்றனர். அவ்வாறானவர்களில் மறக்க முடியாதவராக அமரர். திருமதி. புவனேஸ்வரி விநாயகப்பிள்ளை அவர்கள் திகழ்கின்றார்.


இவர் நான் வலயக்கல்விப் பணிப்பாளராக சம்மாந்துறை கல்வி வலயம் சென்றபோது அங்கு மனைப் பொருளியலுக்கான ஆசிரிய ஆலோசகராக அவர் பணியாற்றிக் கொண்டிருந்தார். இவரது குடும்பத்தினரோடு நான் இவரை அறிந்திருந்தாலும் இவரது கடமையை சீராக, செம்மையாக பணியாற்றும் ஒருவராக கல்வி அலுவலகத்தில் கண்ணுற்றேன். இவரது கணவரும் கோட்டக்கல்வி அதிகாரியாக கடமையாற்றியபோது இருவருமாக கல்வி வலயமும், பாடசாலை மாணவர்களும் உயர்வடைய பணியாற்றியுள்ளதை நான் அறிவேன்.

38 வருடங்கள் கல்விப் புலத்தில் ஆசிரியராகவும், ஆசிரிய ஆலோசகராகவும் பெருஞ் சேவையாற்றி வந்துள்ளார். வலய மட்டத்தின் உயர்வுகளுக்கும், வெற்றிகளுக்கும் எமது குழாத்துடன் சிறந்த ஒத்துழைப்புடன் பணியாற்றினார். தனது பாடத்துறை சார்ந்த கல்விச் செயற்பாடுகளை மேம்படுத்தி ஆசிரியர்களின் நன்மதிப்புடன் திகழ்ந்தவராக இவரின் பணி செய்த காலம் சிறப்புடன் காணப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புன் சிரிப்புடன் உறவாடும் பண்புமும், பொறாமையோ, காழ்ப்புணர்ச்சியோ இன்றி மற்றவர்களின் உயர்வைக் கண்டு பாராட்டி மகிழும் தன்மை இவருக்கே உரிய சிறந்த பண்புகள்.

உள்ளன்போடு உறவு கலந்து, அமைதியாய் வாழ்ந்த ஒரு அன்பு உருவம் சடுதியாக பிரிந்ததை எந்த ஒரு நல்மனமும் மறக்க முடியாததாக உள்ளது. அவ்வகையில்; உறவுகளுக்கு ஆறுதல் கூறி அமரரின் ஆத்ம சாந்திக்காக அனைவருடனும் நானும் பிரார்த்திக்கின்றேன்.




**எம். எஸ். சஹூதுல் நஜீம்**

*வலயக் கல்வி பணிப்பாளர்,*

*சம்மாந்துறை வலயக் கல்வி அலுவலகம்.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் செய்தி

மண்ணுலக வாழ்வை முடித்துக் கொண்ட அமரர். திருமதி. புவனேஸ்வரி விநாயகப்பிள்ளை அவர்கள் இன்று நம் மத்தியில் இல்லை என்பது மிகவும் கவலைதரும் விடயமாகும். பிறந்தவர்கள் எல்லோரும் என்றோ ஒரு நாள் இறந்தாக வேண்டும் என்பது உலக நியதியாகும்.

வீரமுனையைப் பிறப்பிடமாகக் கொண்ட அமரர் அவர்கள் இவ்வுலகில் சுமார் 63 வருடங்கள் எவரது மனமும் புண்படாத வகையில் எவருக்கும் எந்தவிதமான கெடுதலும் நினையாமல் மிகவும் சாந்தமான வாழ்க்கையை வாழ்ந்து முடித்துள்ளார்.

அமரர். புவனேஸ்வரி அவர்கள் கலவிப்புலத்தில் சுமார் 38 வருடங்கள் பெருஞ்சேவையையாற்றி ஆயிரக் கணக்கான மாணவர்கள் உயர்ந்த நிலையை அடைவதற்கு வழிகாட்டியவர் ஆவார். நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயம், றாணடு இந்து மகா வித்தியாலயம், வேப்படித் தோட்டம் வாணி வித்தியாலயம் போன்ற பாடசாலைகளில் கற்பித்தல் செயற்பாடுகளில் சிறப்பாக ஈடுபட்டிருந்தார்.

அமரர். புவனேஸ்வரி அவர்களை கடந்த இரண்டு தசாப்தங்களாக நான் அறிவேன். 2000 ஆண்டில் சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலகத்திற்கு பிரதிக் கல்விப் பணிப்பாளராக நான் பதவியுயர்வு பெற்றுச் சென்றபோது அவ்வலயத்தில் மனைப் பொருளியல் பாடத்திற்கான ஆசிரிய ஆலோசகராக இவர் கடமையாற்றிக் கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது பாடத்தின் அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்காக இவர் பல செயலமர்வுகள், வழிகாட்டல்கள், மாதிரிக் கற்பித்தல்கள் போன்றவற்றை மேற்கொண்டிருந்தார். வலய மட்டக்குழு மேற்பார்வைகளின் போது சிறந்த ஒத்துழைப்பை வழங்கியிருந்தார் மேலதிகாரிகளின் மனங்கோனாதபடி எப்பொழுதும் நடந்து கொண்டார்.

இவரது இழப்பை நினைத்து ஏங்கிக் கொண்டிருக்கும் இவரது கணவன், பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள், கல்விப் புலத்தில் உள்ள அனைவருக்கும் ஆறுதல் கூறுவதுடன் அவரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பவர்களுடன் நானும் இணைந்து கொள்கின்றேன்.



**ஆர். சுகிர்தராஜன்**

*வலயக் கல்விப் பணிப்பாளர்*

*பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகம்*

*களுவாஞ்சிக்குடி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர்.
# திருமதி. விநாயகப்பிள்ளை புவனேஸ்வரி அவர்கள் எங்களுடன். . .

**தனி ஒரு மனிதனின் பிரிவால் இத்தரணி தன் அழகில் ஒரு பகுதியை இழந்து விடுகின்றது என்பது யதார்த்தம். இது போலவே உங்கள் இழப்பால் . . .**

இன்றும் எம்முடன் இருப்பது போன்று உணர்வு உருண்டோடியது மாதமொன்று. வலய குழுவில் அனைவரும் செய்வதறியாது திணறுகின்ற போது நகைசுவையாய் பேசி அனைவரையும் ஒன்றாக்கி குழுவாய் இயங்க செய்தீர்கள் அது எம் நினைவில் இன்றும் நிலைக்கிறது. கணவருடன் தினமும் ஒன்றாக அலுவலகம் வருவீர்கள். உடன் கடைமையாற்றும் உத்தியோத்தர்களை உறவினர் பெயர் கொண்டு அழைத்து மகிழ்விப்பீர்கள். அறுபதிலும் உற்சாகமாய் இளம் வயதினர்போல் உரையாடி கடமையையும் சிறப்பாக செய்து முடித்தீர்கள்.

ஓய்வு காலத்தில் குடம்பத்துடன் நேரத்தை செலவிட வேண்டும் என்று கூறிய உங்களுக்கு காலம் போதாமல் போனது என்ன விதியோ? பிறந்தவர் ஒவ்வொருவரும் இறப்பது நிச்சயம் என்றாலும் உம் இழப்பை எம் மனது ஏனோ ஏற்கவில்லை உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

**எஸ்.புவனேந்திரன்**
*பிரதி கல்விப் பணிப்பாளர்*
*சம்மாந்துறை வலயக் கல்வி அலுவலகம்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புன்னகையரசி புவனேஸ்வரி!

கிழக்கிலங்கையில் தென்தமிழகத்தின் நீண்டபரப்பில் பழம்பெரும் வீரமுனைக்கிராமத்திற்கென தனி அடையாளமுண்டு. சீர்பாததேவி வரலாற்றுடன் இணையப்பெற்ற புகழ்பூத்த வீரமுனையில் பிறந்தவர் புவனேஸ்வரி என்ற பூங்கோதை அவர்கள் இன்றில்லை.

### பூவுலகில் புவனேஸ்வரி!

அத்தகைய பெரும்பதியில் உயர்குடும்பத்தில் ஐந்து சகோதரர்களுடன் உதித்தவர்தான் எமது திருமதி வினாயகம்பிள்ளை புவனேஸ்வரி அம்மையார் அவர்கள்.

அவரை முதலில் எமது சம்மாந்துறை வலயத்திலுள்ள றாணமடு இந்து மகா வித்தியாலயத்தில் சந்தித்தேன். அமைதியான சுபாவம்கொண்ட அவர் கடமையில் கண்ணும்கருத்துமாகவிருப்பார்.

அதன்பின்னர் 1999இலிருந்து 16வருடங்களாக எமது வலயக்கல்விக்காரியாலய கல்விசார் குழாத்தில் ஒருவராக சேவைக்கால ஆசிரியஆலோசகராக எம்முடன் புன்னகையுடன் வலம் வந்தவர் அவர். எமது கல்விசார் குழாத்தில் விரல்விட்டு எண்ணக்கூடிய பெண்களுள் இவரும் ஒருவராவார். அவர் கோபப்பட்டு பாரத்ததில்லை.

அவரது துணைவனார் திரு. வினாயகம்பிள்ளை றாணமடுவில் அதிபராகவிருந்து நாவிதன்வெளிக் கோட்டக்கல்விப் பணிப்பாளராக எமது குழாத்தில் இணைந்தவராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எமது குழாத்தில் அவர்.**

மொத்தத்தில் இருவரும் சமகாலத்தில் எமது வலய கல்விசார் குழுவில் அங்கத்தவராக பயணித்தவர்களாவர். ஆதலால் இருவரையும் நான் நன்கறிவேன். அதற்குமப்பால் இவரது இரு சகோதரர்களான திரு.கமலநாதன் மற்றும் திரு.பாரதிதாசன் இருவருமே எமது வலயத்திலுள்ள இருபாடசாலைகளின் அதிபர்களாவர்.

இருவரும் பழகுவதற்கு நல்ல பண்பானவர்கள். துணிவுள்ளவர்கள். இருவரும் தத்தம் பாடசாலைகளின் கவின்னிலைகளை முடியுமானவரை அபிவிருத்திகாணச் செய்துள்ளனர். சிறந்த ஆளுமையுள்ள அதிபர்களாக விளங்குகின்றனர்.

அவர்களது சகோதரியின் இழப்பு அவர்களை வெகுவாகப்பாதித்துள்ளது என்பதை அதன்பின்னர் அவர்களைச்சந்தித்தவேளை உணரக்கூடியதாயிருந்தது.

அண்மையில் வளத்தாப்பிட்டி அ.த.க.பாடசாலைக்கு குழுநிலைத்தரிசிப்பிற்காக எமது வலயமட்டக்குழு சென்றவேளை அவரது சகோரரான அதிபர் திரு.கமலநாதன் அவர்கள் கண்கலங்கி எழுந்து சென்றுவிட்டார். ஏனெனில் எமதுகுழாத்தின் மற்றுமொரு சேவைக்கால ஆசிரியஆலோசகர் திருமதி மலர் இராஜேஸ்வரன் அலுவலகத்தினுள் வந்தபோது அவருடன் வழமையாகவரும் தனது அக்காவைக் காணவில்லையே என்பதுதான் அந்த வேதனைக்குக் காரணமாயிருந்தது என்பதை பின்னர் அறிந்தோம்.

இழப்பின் வலியை நன்கு உணர்ந்தவன் என்ற வகையில் இவர்களது உணர்வை வலியை அறிய எனக்கு நேரமிருக்கவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குடும்பகுவலயத்தில் அவர்.**

ஒவ்வொரு ஆணின் வெற்றியின் பின்னால் ஒவ்வொரு பெண் இருப்பாள் என்று சொல்வார்கள். திரு விநாயகப்பிள்ளைக்கு அனைத்துமே அவர்தம் மனைவி பூங்கோதையே என்பது மிகைப்பட்டகூற்றல்ல. எதையெடுத்தாலும் "அவவிடம் கேளுங்கள்" என்பார்.

அவர் சமுகப்பணி கல்விப்பணி தெய்வப்பணி தருமப்பணி பாதுகாப்புப்பணி என்று பல பணிகளைச்செய்து சீரும் சிறப்புடன் வாழ்ந்தவர். ஆலயங்களுக்கும் பொது அமைப்புகளுக்கும் வாரி வழங்கிவந்தவர்.

அவரை நாம் பொதுவாக மிஸ்சிஸ் விநாயகப்பிள்ளை என்றுதான் அழைப்போம். அவர் அதிகம் பேசமாட்டார். யாருடனும் சினந்துகதைத்த வரலாறு இல்லை.

முழுக்குடும்பத்தின் ஆணிவேராகத்திகழ்ந்த அவரை இறைவன் 63வயதில் தன்னோடு இணைத்துக்கொண்டதில் அனைவருக்கும் வேதனைதான். இருந்திற்றபோதிலும் இயற்கையின் நியதி அதுதான்.

**வாழ்வின் நியதி!**

"வந்தவர் எல்லாம் தங்கிவிட்டால் இப்பூமியில் எமக்கு இடமேது? வாழ்க்கை என்பது வியாபாரம் அதில் ஜனனம் என்பது வரவாகும் மரணம்என்பது செலவாகும். போனால் போகட்டும்போடா!" என்று கவிஞர் கண்ணதாசன் பாடியது பொய்யல்லவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமிக்கு ஒரு யாத்திரை வந்தோம். யாத்திரை முடிந்துவிட்டது. செல்லவேண்டிய நேரம். சென்றேஆகவேண்டும். யாராலும் தடுக்கமுடியாது.

ஜனனம் தற்செயலானது மரணம் நிச்சயமானது. அவர் இந்த அநித்தியமான உலகைவிட்டு நித்தியமான உலகிற்கு சென்றுள்ளார்.

பிறப்பு ஒரு சம்பவமாக இருந்திற்றபோதிலும் மரணம் ஒரு வரலாறாக இருக்கவேண்டும் என்பார்கள். அதனை திருமதி வினாயகம்பிள்ளை சாதித்துக்காட்டியுள்ளார்.

"***தக்கார் தகவிலார் என்பது அவரவர் எச்சத்தால் பெறப்படும்***" என்று வள்ளுவப் பெருந்தகை கூறியுள்ளார். நல்ல பிள்ளைகளை இப்பூவுலகிற்களித்து பேரப்பிள்ளையையும் கண்டு இப்பூவுலகை விட்டு பிரியாவிடை பெற்றுச் சென்றுள்ளார். அவர்தம் ஆத்மா சாந்தியடைவதாக.

*சோதரன்.*

**விபுலமாமணி தேசமான்ய வி.ரீ.சகாதேவராஜா** (JP)

*உதவிக்கல்விப்பணிப்பாளர், சிரேஸ்ட ஊடகவியலாளர்.*

*காரைதீவு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீத்தார் பெருமை:-
## அமரர். திருமதி விநாயகப்பிள்ளை புவனேஸ்வரி அவர்களின் நினைவாக . . . .

அமரர். புவனேஸ்வரி அவர்கள் சிவபதம் எய்தினார் என்றசெய்தி கேள்வியுற்றதும் எளிதில் நம்ப முடியாமற் போயிற்று: திடுதிப்பெனநிகழ்ந்த அவரது மரணம் அவரை நேசித்த உள்ளங்களை மிகவும் துயருற வைத்தது. அன்னாருடன் மிக நீண்ட காலம் கல்விப்புலத்தில் பணியாற்றியவன் என்ற வகையில் மாத்திரமல்ல அன்னாரது குடும்பத்துடன் அன்னியோன்னியமாகப் பழகியவன் என்ற வகையில் அன்னாரது 31ம் நாள் நினைவு மலருக்கு இச் செய்தியினை எழுதக்கிடைத்தமை பற்றி மகிழ்வுருகிறேன்.

"அறனெனப்பட்டதே இல் வாழ்க்கை அ..தும் பிறன் பழிப்பது இல்லாயின் நன்று" என்றான் வள்ளுவன்

பிறர் பழிக்காமலும், அவச் சொல்லால் வையாமலும் வாழ்வது என்பது எல்லோருக்கும் கிடைப்பதில்லை. அந்த வகையில், அமரர். புவனேஸ்வரியவர்கள் எல்லோரும் சிலாகித்துப் பேசக்கூடிய சிறப்பான வாழ்வை மேற்கொண்டவர். என்பது மிகவும் மனங்கொள்ளத்தக்கது. கிழகிலங்கையில் தமிழர் செறிந்து வாழும் வீரமுனை எனும் புகழ்பூத்த பழம்பதியில் கௌரவமான இந்துக் குடும்பமொன்றில் பொன்னையா கனகம்மா ஆகிய தம்பதியினருக்கு கனிட்ட புத்திரியாகப் பிறந்த புவனேஸ்வரியவர்கள் விநாயகப்பிள்ளையுடன் திருமண வாழ்க்கையில் இணைந்து கொண்டார். ஓர் அன்பு மகனும், மகளும் அவருக்குண்டு. மூன்று சகோதரர்களுடனும், இரு சகோதரியுடனும் பிறந்த புவனேஸ்வரி அவர்கள் இறுதிவரை அன்புப் பிணைப்புடன் இருந்தமை மனங்கொள்ளத்தக்கதே:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் எனப் பலதிறப்பட்டவரோடும் மிகவும் அன்னியோன்னியமாகவும், அன்புடனும் அவர் பழகியமையினால் அவரது நினைவலைகள் பலரது நெஞ்சங்களில் நிழலாடுகின்றன. நீர்க்குமிழிபோன்று நிலையில்லாத இவ்வுலக வாழ்வில் வாழ்ந்த வாழ்க்கையில் இறுதியாக நினைவு கூரத்தக்கவை அவர்களது பண்பும், பழகும் விதமுமேயன்றி வேறென்ன.

அமரர். புவனேஸ்வரி அவர்களிடம் எனக்குப் பிடித்த இரு குணாம்சங்களை இங்கு குறிப்பிட வெகுவாக விரும்புகிறேன். ஒன்று அவசரப்படாது அமைதியாகப் பேசுவது; மற்றையது; மற்றவர் மனது புண்படாமல் உரையாடுவது. இன்றைய கால கட்டத்தில் இவைகளைக் கடைப்பிடிப்பது என்பது சாமானிய மனிதர்களுக்கு மிகவும் கஸ்டம். ஆனாலும், அமரர். புவனேஸ்வரி அவர்கள் தனது இறுதி மூச்சுவரை இத்தகைய இரு நற்குணங்களையும் கடைப்பிடித் தொழுகினார். என்பதில் துளியளவும் எனக்குச் சந்தேகமில்லை.

ஓர் ஆணின் வெற்றிக்கும், புகழ்ச்சிக்கும் பின்னால் நிற்பவர் பெரும்பாலும் வாழ்க்கைத் துணைவி என்பது வாழ்வியல் மரபு. அந்த வகையில் ஓய்வுநிலைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் விநாயகப்பிள்ளையின் அனைத்து வெற்றிகளுக்கும் புவனேஸ்வரி அவர்கள் துணை நின்றுள்ளார். எதற்குமே கலங்காத விநாயகப்பிள்ளை கண்ணீர் விட்டழுத சம்பவமே என் மனதை நெகிழ வைத்தது.

“இல்லதென் இல்லவள் மாண்பானால்
உள்ளதென் இல்லவள் மாணாக்கடை”

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியின் பயிற்றப்பட்ட ஆசிரியராக வெளியேறிய புவனேஸ்வரி அவர்கள் இறாணமடு இந்துக்கல்லூரி, 4ம் கிராமம் வாணி வித்தியாலயம், நாவிதன்வெளி அன்னமலை மகாவித்தியாலயம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய கஸ்டப் பிரதேசங்களில் பிரச்சனைக்குரிய காலப்பகுதிகளில் தியாக மனப்பான்மையுடன் கடமையாற்றி அன்றைய காலகட்டத்தில் பின்தங்கிய பிரதேச மாணவர்களின் கல்வியபிவிருத்தியில் முழு மூச்சுடன் பணியாற்றியவர்.

கலவரச்சூழ்நிலைகளும், அடிக்கடி இடப்பெயர்வுகளும் நடைபெறும் 11ம் கிராமத்தில் பாடசாலை விடுதியில் தங்கியிருந்து கணவருடன் கல்விப் பணியாற்றியவர். என்பது மறக்கமுடியாத நிகழ்வாகும்.

நான் உதவிக் கல்விப்பணிப்பாளராக இருந்த காலப்பகுதியில் தமிழ் மொழித்தினப் போட்டிகளில் அவரை நடுவராக நியமித்த போதெல்லாம் தனது பணியினை மிகச் சிறப்பாக மேற்கொண்டு குழுமனப்பான்மையுடன் செயலாற்றியவர். தனது முயற்சியினாலும், தளராத உழைப்பினாலும் சம்மாந்துறை வலயத்தின் ஆசிரிய ஆலோசகராகப் பின்னாளில் நியமிக்கப்பட்டார். பதவியினால் செருக்கோ இடாம்பீகமோ அவர் ஒரு போதும் அடையவில்லை. சம்மாந்துறை வலயம் நடாத்திய மிகப் பெரும் கண்காட்சியின் போது அவரது பாடப் புலம் சம்பந்தமாக அவர் ஆசிரியர்களை வழி நடாத்தி நெறிப்படுத்தியது என்றும் நன்றியுடன் நோக்கத்தக்கது.

நீர்க்குமிழி போன்ற நிலையற்ற வாழ்வில் அன்னாரது பணியும் பண்பும் நினைவு கூறப்படவேண்டியவை "வாழுகின்ற மக்களுக்கு வாழ்ந்தவர்கள் பாடமடி" என்பதற் கிணங்க வாழ்ந்த அமரர் புவனேஸ்வரியின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரை இழந்து தவிக்கும் கணவன், பிள்ளைகள், பேரன், சகோதரர், சகோதரி மற்றும் உற்றார், உறவினர்களுக்கும் மனமார்ந்த ஆறுதல்களை ஆற்றுப்படுத்துகிறேன்.

*அன்புடன்*

**நா. செல்வநாதன்**

*விரிவுரையாளர்*

*தேசியக் கல்விக்கல்லூரி, பொலன்னறுவை*

"பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்றுமே தம்பி என்று அழைத்திடும் அன்புள்ள ஆசிரியை

13- 06 - 2018 ஆம் திகதி அமரத்துவம் அடைந்த அமரர். திருமதி. விநாயகப்பிள்ளை புவனேஸ்வரி அவர்களின் ஆத்மா இறைவன் சந்நிதியில் பாதம் பணிய வேலண்டும் என்று இறைவனை இறைஞ்சியவனாக 31ம் நாள் நினைவஞ்சலி மலருக்கு எனது இதழை இத்தால் சமர்ப்பிக்கின்றேன்.

அமரர். விநாயகப்பிள்ளை புவனேஸ்வரி அவர்கள் ஆசிரியையாக, ஆசிரிய ஆலோசகராக கடைமையாற்றும் போது நான் அவருடைய காலத்தில் ஆசிரியராக, அதிபராக, கோட்டைக்கல்விப் பணிப்பாளராக அவரோடு இணைந்து சேவையாற்றிய போது, கனிவான வார்த்தையால் உள்ளம் உருகி குளிரும் படி "தம்பி" என்று விழித்துப் பேசிடும் அன்புள்ள ஆசிரயையை நினைத்துப் பார்க்கையில் மனம் கசிந்துருகின்றது. அவர் சேவையாற்றிய காலத்தில் சீர்தூக்கிப் பார்க்கும் போது கல்வி கற்பித்த மாணவ மாணவிகளுடனும், அதிபர், சக ஆசிரியர்கள், கல்வித் திணைக்கள ஊழியர்களுடனும் கடிந்து பேசி கோபப்பட்டதை ஒரு கணப்பொழுது கூட கண்டதில்லை. அவ்வாறு மற்றவர்களுடன் அனுசரித்து அரவணைத்து நிஜ வாழ்க்கையில் முன்மாதிரியாக நடந்து காட்டிய உத்தமி. கோபத்தை தன்னகத்தே இருந்து தூக்கி எறிந்து அன்பை மாத்திரம் அரவணைத்துக் கொண்டு வாழ்ந்து காட்டியவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அன்பு பிறரை விரும்பும் தன்மைக்கு அடிகோலும் அந்த விருப்பு நாளடைவில் எல்லோரிடத்திலும் நட்பு பூணும்" என்பதற்கு இணையாக அன்பால் எல்லோரிடத்திலும் நட்புக் கொண்டவர். அதுமட்டும் அல்லாமல் தம் வீடு தேடி வந்துள்ள விருந்தினரை பேணி உபகாரம் செய்யும் நல்ல மனையாளாக திகழ்ந்தவர்.

சிறப்பு பொருந்திய மாதாவாக, எல்லோரும் போற்றும் குருவாக, கணவனுக்கு பணியாற்றுகினற மனைவியாக, முன்மாதிரியாக திகந்தவர் அமரர். விநாயகப்பிள்ளை புவனேஸ்வரி அவர்கள் அவர்களது ஆத்மா இறையடி சேர இறைஞ்சி நின்கின்றேன்.

**திரு. ச. சரவணமுத்து**
*கோட்டக் கல்விப் பணிப்பாளர்,*
*நாவிதன்வெளி.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அதிகாலை வேளையில் இதயத்தை சல்லடையாக்கி அலை பேசியில் செய்தி . . .**

*"அம்மா செத்திட்டாவாம்"*

தீயிலே விழுந்த புழுவைப் போல்... அம்மா!
துடிதுடித்துப் போனோம்.
செய்வதறியாது திகைத்து நின்றோம்.
அந்தச் செய்தி பொய்யாகி விடக்கூடாதா.. என்று
மனமும் ஓர் கணம் ஏங்கி தவித்தது
கூற்றுவன் கொடியவன்; கொண்டு சென்றான்... என்
அன்புத் தாயை எம்மிடம் இருந்து
பிரித்து பொறாமை கொண்டான்.

போதும்... எம் தாய்
எம்மீது கொண்ட தாய் பாசத்தில்
ஐஇரு திங்கள் கருவிலே சுமந்து
ஆசையாய் பெற்றெடுத்து
அமுதோடு அன்பையும் ஊட்டி
அறிவுரைகள் பலகூறி,
பக்குவமாய் எம்மை வளர்த்தீர்
பாதியிலே எம்மை விட்டு செல்லத் தானோ...?

நோய்யுற்ற வேளையிலும்... சீக்கிரமாய் சீராகி
வீடு வந்து சேர்ந்திடுவீர் என்று
நாம் நம்பியிருக்க... இதயத்தை சிதைத்து விட்ட
மரணச்செய்தியாய் வந்ததேனோ...?

தாயை இழந்த குஞ்சுகளாய்...
உம் பிள்ளைகள் நாம் தவித்து நிக்க,
நிரந்தரமற்ற இவ் உலகில்
வாழ்ந்தது போதுமென்று, சிவ லோகம் விரைந்ததேனோ?
அம்மா.. தாயில்லாப் பிள்ளைகளாய்
இத் தரணியிலே தவித்து நிற்கின்றோம்...
உன் தாய் பாசத்திற்காய் ஏங்கித் தவிக்கின்றோம்.
உறவினர்கள் பலர் உறுதுணையாய்
உடன் இருந்தாலும்,
தாயன்பிற்கு இணையாகுமா...?
எம் அன்னை போல் அன்பு கொள்ள
இவ்வுலகில் யாரோ...?

*அன்புப் பிள்ளைகள்*
**நடேதினி, ரகுதாசன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர்.
## திருமதி. விநாயகப்பிள்ளை புவனேஸ்வரி
## அவர்களுக்கு
## மைத்துனி குடும்பத்தினரின் கண்ணீர் துளிகள்

எங்கள் அன்புக்கும் மதிப்பிற்குமுரிய புவனா அவர்கள் அன்புடன் கூடிய அமைதி வடிவானவர் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மருமகன் கணவருடன் மிகவும் பாசம் கொண்டு வாழ்ந்தார். பிள்ளைகள் கஷ்டப்படக் கூடாது என்று வாழ்ந்தார். மிகவும் நகைச்சுவையுடன் பேசி அனைவரையும் தன் பால் ஈர்த்து அன்பால் பிணைத்து இறை சிந்தனை நிறைந்து வாழ்ந்தவர். அவரைப்பற்றி எழுதக்கிடைத்தது பாக்கியமாகக் கருதி எங்கள் கண்ணீர்த் துளிகளை கவிதை வரிகளாகக் கீழே.......

*குடும்ப விளக்கே குறைவில்லாச் செல்வமே*
*நிறைவான பக்தியோ நின்னைப் பிரிந்ததோ*
*மைத்துனி உன்னைப் பிரிவேன் என*
*மனதாரும் நினைக்கவில்லை*
*நோயுற்ற போதும் நொடியிலே சுகமாகிவிடும்*
*இம்முறையும் அப்படியே...........*
*எண்ணியிருந்தேன்......*
*இரக்கமற்ற காலனவன் இப்படி பிரித்தானே*

*பிள்ளைகள் இருவரும் பேதலித்து நிற்கின்றனர்*
*மருமகன் தச்ஷனனோ மனமுடைந்து தவிக்கின்றான்*
*கரம் பிடித்த கணவனோ கவலையில் வாடுகிறார்*
*உடன் பிறப்புக்களோ உறக்கமின்றி தவிக்கின்றனர்.*
*அருமை பேரனவன் அம்மம்மாவை தேடுகின்றான்...*
*மேதினியில் நாம் கான மீண்டும்*
*மீண்டு வரமாட்டாயோ*

*உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.*

*மைத்துணி குடும்பம் சார்பில்*

**திருமதி. தில்லேஸ்வரி யோகநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள் இழப்பை மறுக்க உள்ளம் மறுப்பதேனோ. . .

உள்ளத்தை உறுக்கிடும் உங்கள் இழப்பு நிஜம் என்று எண்ண உள்ளம் மறுப்பதேனோ? தினம் உங்கள் வருகையை கண்கள் எதிர்பார்பதேனோ? ஆலமரம் விழுதுகளை போல் உன் சகோதர்களை உங்கள் அன்பும் அரவணைப்பும் நிறைந்த பிள்ளைகளை ஏன் துணைவரை தனியே விட்டு சென்றதேனோ? நடந்தது கனவோ என்றெண்ணி நெஞ்சம் தடுமாறுவதேனோ? பாசம் வைப்பது பாரினில் பாரிய தவறுதானே.

நம் கூமுவரும் சிறகில்லாத பறவைகளாக பாடசாலை பாடசலைகளாக அலைந்து திரிந்து சென்று எவ்வளவோ சோதனைகள், சாதனைகள் மற்றும் ஆசிரிய ஆலோசகருடன் கதைத்து சிரித்த கேளிக்கதை வார்த்தைகள் எங்களை விட்டு அகல வில்லை. உன் இறப்பு செய்தியை தம்பி மூலம் கேட்டவுடன் திடீர் அதிர்ச்சியடைந்தேன். உன்னுடைய புன்னகை சிரிப்பு எங்கு போய் விட்டது என்று ஒரு கனம் எண்ணிப்பார்த்தேன். எவ்வளவு சமையல் கதைகள், குடும்ப கதைகள் நடக்கும் போது, அல்லது பிரயாணம் செய்யும் போது நேரம் தெரியாமல் கதைத்து கொண்டு செல்வோம்.

அன்பு தெய்வத்துடன் பழகிய 16 வருடமும் இனிமையான காலமாக கழிந்து விட்டது. ஒரு வார்த்தை கேட்க விரும்புகிறேன். உன்னுடைய மகனை தனிமையில் விட்டு சென்று விட்டாயே? என்ற கேள்வியை கேட்டு அவனை தெய்வமாக நின்று பாதுகாத்து விடு. உங்கள் ஆத்மா சாந்தி பெற்று முத்திப்பேறடைய எல்லாம் வல்ல இறைவனை தினம் தினம் பிரார்த்திகின்றோம்.

**திருமதி. தே. இராஜேஸ்வரன்**
*அன்பு நண்பியும்*
*ஆசிரிய ஆலோசகரும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர். திருமதி. புவனேஸ்வரி விநாயகப்பிள்ளையுடன் . . .

நாங்கள் இருவரும் ஒரே பிரதேசத்தை (வீரமுனை சம்மாந்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள். இருவரும் ஒரே பாடசாலையாகிய சம்மாந்துறை முஸ்லீம் மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்றவர்கள். க.பொ.த. சா/த வரைக்கும் ஒரே இடத்தில் இருவரும் இடம் மாறாமல் இருந்தவர்கள். அந்த காலத்தை நினைத்து பார்க்கும் போது எவ்வளவு சந்தோசம். 1975 - 1976 ம் ஆண்டு காலப் பகுதியில் G.C.E O/L பரீட்சை எடுத்தோம். குறுகிய காலம் வீட்டில் இருந்தோம்.

1978ம் ஆண்டு இருவருக்கும் ஆசிரியர் நியமனம் கிடைத்தது. நேர்முகப் பரீட்சைக்கு இருவரும் சென்றோம். நியமனம் எனக்கு சது/அல்மர்ஜான் முஸ்லீம் மகளீர் கல்லூரி கிடைத்தது. புவனேஸ்வரிக்கு நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயம் கிடைத்து கடைமை புரிந்தோம்.

பின்னர் 1981ம் ஆண்டு எனக்கு யாழ்பாணம் அரசினர் ஆசிரயர் பயிற்சிக் கல்லூரி, கோப்பாய் கிடைத்தது. புவனேஸ்வரிக்கு 1982 ம் ஆண்டு அதே கலாசாலை கோப்பாய் கிடைத்தது. நான் சித்திர ஆசிரியையாகவும், புவனேஸ்வரி மனையியல் ஆசிரியையாகவும் ஒன்று சேர்ந்தோம். இரு வருடத்துக்குள் எங்கள் வாழ்க்கை மிகவும் சந்தோசமாகக் கழிந்தது. பின்னர் 1983 ம் ஆண்டு கலாசாலையில் இருந்து வெளியாகிவந்ததும் எனக்கு சம்மாந்துறை முஸ்லீம் மத்திய மகாவித்தியாலயம் நியமனம் கிடைத்தது. புவனேஸ்வரிக்கு றாணமடு இ.ம. வித்தியாலயம் கிடைத்து கடைமையாற்றினோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் நீண்ட காலத்துக்குப் பிறகு 1999 ம் ஆண்டு இருவருக்கும் சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலகத்தில் ஆசிரிய ஆலோசகர் நியமனம் கிடைத்தது. அங்கு இருவரும் ஒன்றாக இணைந்து வலயக் கல்வி அலுவலகத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் இருவரும் இணைந்து செல்வோம். பிரச்சினைகளைத் தீர்ப்போம். ஆலோசனைகளை வழங்குவோம்.

பின்னர் 2015 ம் ஆண்டு புவனேஸ்வரி ஓய்வு பெறும் காலம் வந்தது. அவர் கடமையை முடித்து ஓய்வு பெற்றுள்ளார். பின்னர் 2016ம் ஆண்டு நானும் ஓய்வு பெற்றுள்ளேன். பிறகு இருவரும் சந்தித்த நாள் வலயக்கல்வி அலுவலகம் நடாத்திய பிரியாவிடை நாள். அவளுடன் வாழ்ந்த காலங்களை எப்படி மறக்க முடியும். அவள் எந்தநேரமும் கதைப்பது போலவும் சிரிப்பது போலவும் நினைவுக்கு வரும். அவளிடம் கோபமே இல்லை எல்லோரிடமும் பகிடி விடுவதும், சிரிப்பவளுமாகவும் இருப்பாள். மற்றவர்களுடன் அனுதாபப்படுவாள். பலருடைய இன்ப துன்பங்களில் தானும் கலந்து கொள்வாள். இங்கு போவதென்றாலும் இருவரும் இணைந்து செல்வோம். இப்படியான ஒரு நல்ல குணம் படைத்தவளை இனி நான் எங்கு காண்பேன்.

நான் ஒரு நல்ல நண்பியை இழந்து விட்டேன். அவளை நினைத்து வேதனைப் படுகின்றேன். அவளுக்காக நானும் எனது குடும்பமும் இறைவனிடத்தில் பிரார்த்தனை செய்கின்றோம். அவளுக்கு இறைவன் சுவனத்தை கொடுக்க வேண்டும் என்று பிராத்திக்கின்றேன்.

**அவள் சகோதரி திருமதி. சேகும்மா ஆதம்லெப்பை**
*ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர் (ISA)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறைந்தும் மணம் வீசும்
## பூமலர் புவனேஸ்வரி . . .

சீர்பாதப் புகழ் மணக்கும் வீரமுனை பதியினிலே செல்வமும், சிறப்பும், வசதியும், வாய்ப்புக்களும், கொண்ட குடும்பத்தில் பிறந்து வளர்ந்த புவனேஸ்வரி அம்மணி அவர்கள் அன்று சுற்றிவரத் திரண்ட சுற்றங்கள் இருந்தபோதிலும் கூட நல்லாசான் விநாயப்பிள்ளையின் திருமணபந்தத்தினாலே தன் கணவன் பணிபுரிந்த றாணமடு இந்து மகா வித்தியாலயத்தின் ஆசிரியர் விடுதியில் "தலைவனின் வழியே தன் வழிக்கு பெருமை" என்ற எண்ணத்தோடு தானும் புறப்பட்டு வந்தார் றாணமடுவிற்கு. அன்று றாணமடுக்கிராமத்தில் வாழ்ந்த மக்களின் கல்வித் தாகத்தினை தணிப்பதற்கு ஆசிரியர்கள் இல்லை எமது கிராமத்தில 1977 இல் முதல் முதலாக ஆசிரியராக வந்தார் விநாயகப்பிள்ளை ஐயா:, 1984 இல் திருமணம் முடித்த கையோடு "சீதைக்கு ராமன் வாழும் இடமே அயோத்தி" என்பதைப்போல காடு சூழ்ந்த றாணமடு. போக்கு வரத்துவசதி இல்லை, மின்சாரம் இல்லை, மருத்துவ வசதி இல்லை அதிகஸ்ரபிரதேசமாக இருந்தபோதிலும் கணவனின் சேவையும், கல்வியின் அபிவிருத்தியும் எங்கள் பிரதேசத்திற்கு தேவை என்றுணர்ந்து சேவையாற்றினார்.

அன்று றாணமடுவில் ஓர் இரு ஆசிரியர்களே பணியாற்றினார்கள் வெளியிடங்களில் இருந்து வந்தவர்கள் எல்லாம் பட்டிகாடு, என்றும் காட்டுப்பள்ளி, என்று சொல்லி குறுகிய காலத்தில் இடமாற்றம் பெற்று சென்றரவர்கள் ஆதிகம். ஆனால், புவனேஸ்வரி அம்மணி ஆசிரியர் விடுதியில் தங்கியிருந்து வகுப்பறைக் கற்பித்தலையும் விடுதியில் வைத்து பின்னேர வகுப்புகளையும் நடாத்தினார். அப்போது கைக்குழந்தையை கைமாறிக் கொடுக்கவும் எவரும் இல்லாத நிலையில் அற்பணிப்போடு எங்களைக் கற்பித்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவர் கல்விப் பணியோடு கிராம முன்னேற்றத்திற்கு பலவழிகளிலும் உழைத்துக் கொண்டு இருந்தவேளை எங்கள் கிராமத்தின் மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் கைக் குழந்தையும், கையுமாய் இரவு பகலாக கணவரோடு இணைந்து கல்விச்சேவையினை ஆற்றினார். காலங்கள் உருண்டோடினாலும் கற்றவர் மற்றவர் அனைவரின் உள்ளத்திலும் என்றும் நீங்காத நினைவுகளாய் நிறைந்துள்ளது. "விநாயகப்பிள்ளை என்ற ஆலவிருட்சம் விட்ட விழுதுகள் தான் நாங்கள்" அவர் உருவாக்கிய கல்வி சாம்ராச்சியத்தின் மைல் கற்கள்தான் நாங்கள். இத்தனைக்கும் துணைநின்றவர். அவர்கைபிடித்த பூங்கோதை என்பதை அனைவரும் அறிவர். அவர் எங்களுக்கு ஊட்டிய கல்வி என்றும் அழியாத சொத்தாக உள்ளது.

"காலத்தினால் செய்த உதவி ஞானத்திலும் மாணப் பெரிது" என்பதைப்போல் அன்று எங்கள் பிரதேசத்திற்கு அவர் ஆற்றிய பணியும் அற்பணிப்பும், தியாகமும் இப்போதுள்ள சமூகத்திற்கு பாலில் கலந்த நீராய் பிரித்தறிய முடியவில்லை. "விநாயகப்பிள்ளை ஐயா எப்போதும் சொல்வார். நானும் என்மனைவியும் ஒரே திணைக்களத்தில் ஒரே கல்வி புலத்தில் கடமை புரிவதால் எனக்கு பிரச்சனை குறைவு, இல்லாவிட்டால் நான் பல பிரச்சனைகளை சந்தித்திருக்க வேண்டி இருந்திருக்கும்" என்பார்.

ஆசிரிய ஆலோசகராக பணிபுரிந்த காலத்திலும் எம்மை எல்லாம் அவரின் மாணவர்களைப் போலவே கருதுவார். பண்பிலும், பாசத்திலும் அவருக்கு நிகர் எவரும் இல்லை. "தீயாகதீபம்"புவனேஸ்வரி (பூங்கோதை) அம்மாவின் சேவைகளை நாங்கள் எப்போதும் மறவோம்.

*தங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திகின்றேன்*

**திரு. M. ஜெயசுந்தரம்**
*சது/அகத்தியர் வித்தியாலயம்*
*மத்தியமுகாம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண ஆசௌசம் அல்லது மரணத்துடக்கு

ஒரு குடும்பத்தில் ஒரு மரணம் நிகழும் பொழுது அதனால் அக்குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு ஏற்படும் ஆசௌசம் மரண ஆசௌசம் எனப்படும். இதே மரணத்துக்கு துடக்கு என்றும் கூறுவர். துடக்கு என்றால் பாதிப்பு. துடக்கு என்று சொல் இந்தப் பொருளிலே சிவஞான சித்தியார் சுபக்கம் 51 வது பாடல் உறையிலே கையாளப்பட்டிருக்கின்றது. பலர் அந்த ஆசௌசம் அல்லது துடக்கு சுகாதார காரணங்களுக்காக அநுட்டிக்கப்படுகின்றது என்று கூறுவது ஆதாரமற்றதவறான கருத்து.

01. குடும்பத்தில் ஒருவர் இறந்தால் அதால் ஏற்படும் துடக்கு பிராமணர்களுக்கு இது பத்து நாட்கள். ஷத்திரியர்களுக்கு பதினைந்து நாட்கள். வைசியர்களுக்கு இருபது நாட்கள். சூத்திரருக்கு முப்பது நாட்கள்.

02. எதிர்பாராத விபத்து மற்றும் கொலை போன்றவற்றால் ஏற்படும் துர் மரணங்களுக்கு ஆசௌசகாலம் 45 நாட்கள் அல்லது 90 நாட்களாகக் கொள்ளலாம். இது குடும்பத்தர்களின் மன நிலையை அநுசரித்து நிர்ணயிக்கப் படுகின்றது.

03.தற்கொலையால் ஏற்படும் மரணங்களுக்கு இந்த ஆசௌசகாலம் ஆறு மாதங்களாகும். ஆயினும் யுத்தத்திலே சென்று போரிட்டு மரித்தவர்களுக்கும், தர்மத்திற்காகக் தம்முயிரை ஈந்தவர்களுக்கும், பெண்களை அபலைகளை, பசுக்களை, பிராமணரை, இறைசொத்தைக் காக்க தம்முயிரை ஈந்தவர்களுக்கும், தமது கற்பைக் காப்பாற்ற தமது உயிரைமாய்த்த பெண்களுக்கும், கணவன் இறந்த பின் அவன் சிதையில் தானும் ஏறி உயிர் விட்ட பெண்ணுக்கும் இந்த விதி இல்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் மரணம் புண்ணிய மரணம் ஆதலால் இவர்கள் நற்கதி அடைவார்கள் இவர்களின் மரணத்துக்கு முன்னர் கூறியபடியே சாதாரணமாகவே ஆசௌச காலம் அமையும். ஆயினும் மேற்கூறிய காரணங்களுக்காக அல்லாமல் தற்கொலை செய்து கொண்டவர்கள் பித்ருலோகத்தையோ, மேல் உலகங்களையோ அடையமுடியாமல் அலைவார்கள். எவர்கள் ஆத்மஹத்தி செய்தவர்களோ அவர்கள் அடையும் உலகங்கள் காரிருள் கவிந்த அசுர உலகங்களேயாம். ஈசவாஷ்ய உபநிஷத்து.

04. கர்பத்தின் முதல் ஆறு மாதங்களில் கருச்சிதைவு ஏற்பட்டால் எத்தினை மாதத்தில் கருகலைத்தோ அத்தனை நாட்கள் தாய்க்கு மாத்திரம் துடக்கு. உதாரணமாக நான்காம் மாதம் கருச்சிதைவானால் பிராமணப் பெண்ணுக்கு நான்கு நாட்கள் பிறப்புத்துடக்கு. மரணத்துடக்கு இல்லை ஏனையோருக்கு இதன் மூன்று மடங்கு அதாவது 12 நாட்கள் துடக்கு தந்தைக்கும், மற்றவர்களுக்கும் துடக்கு இல்லை அவர்கள் எந்தவிதமான கருமங்களும் செய்யவேண்டியதில்லை

05. ஏழாம் எட்டாம் ஒன்பதாம் மாதங்களில் இவ்வாறு குழந்தை பிறந்து இறந்தாலோ, அல்லது இறந்து பிறந்தாலோ தாய்க்கும் தந்தைக்கும் முன் சொன்னவாறே பூரணபிறப்புத் துடக்கு உண்டு. மரணத்துடக்கு இல்லை. எந்த விதமான சடங்குகளும் இல்லை துடக்கு உறவுகளுக்கு கேள்விப்பட்டதில் இருந்து துடக்கு. இது அவர்கள் தலை முழுகியவுடன் கழியும்.

06. நிறை மாதத்தில் குழந்தை பிறந்து இறந்தாலும், இறந்து பிறந்தாலும் இவ்வாறே பிறப்புத் துடக்கு உறவுகளுக்கு உண்டு. ஆனால் இதற்கு மரணத்துடக்கு இல்லை. சடங்குகள் ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. ஊர்க் குழந்தைகளுக்கு நீர், பால், பாயாசம் போன்ற திரவ உணவுகள் அல்லது பால் சோறு, தயிர் சோறு கொடுக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. பல் விழுந்து முளைப்பதற்கு முன்னர் அல்லது உப நயனத்துக் முன்னர் அதாவது ஏழு வயதுக்கு முன்னர் உள்ள பிள்ளைகள் இறந்தால் அது பால மரணம் சோதிடத்தில் இதை பால அரிஷ்டம் என்று கூறுவர். இவர்களுக்கு தகனம் இல்லை. ககனமே (புதைத்தல்) உண்டு. மரணத்துடக்கு துடக்கு முன் சொன்னது போல உறவுகளுக்கு உண்டு துடக்கு கழியும் போது ஊர்க் குழந்தைகளுக்கு பால், பாயாசம், உணவுகள் என்பவற்றை வழங்க வேண்டும்.

துடக்கு கழியும் போது செய்யும் உதககும்பதானத்தைத் தவிர வேறுசடங்குகள், தானங்கள் தேவையில்லை. உதககும்பதானம் (பொற்) குடத்தில் பால், நெய் நிரப்பி அவற்றை பிராமணருக்குத் தானமாக கொடுத்தல். ஆதாரம் அகோரசிவாச்சாரியார்பத்ததி, ஆசௌசதீபிகை, பராசரஸ்மிருதி, கருடபுராணம்.

08. ஏழுவயதுக்கு மேற்பட்ட பிள்ளைகள் இறந்து போனால் பெரியவர்கள் இறந்தது போலவே அவர்களுக்கு தகனம் உண்டு. விருஷோற்சர்க்கம், உதக தானம் முதலியவற்றை செய்யவேண்டும். ஆண்டுதிவசம் ஒரு வருடத்தில் செய்யலாம். அனால் அதற்குப் பின்னர் வருடாவருடம் செய்யும் திவசம் இல்லை. ஆனால் பிள்ளையின் தந்தை தன் இறந்த தகப்பனுக்கு தர்ப்பணம் செய்யும் திவசம் மாலயம் அமாவாசைகாலங்களில் இந்தப் பிள்ளையையும் கருதி தர்ப்பணம் செய்யலாம். இவர்களுக்கு பால், தயிர் வெல்லம் கலந்து பிண்டம் போட வேண்டும். குடை தீபம் முதலியவற்றை தானம் கொடுக்கவேண்டும். இயலுமானவரை பதின் மூன்று அந்தணர்களுக்கு குடை மோதிரம், பலகை, ஆடை, ஆபரணம், தீபம் முதலியவற்றைத் தானமாகக் கொடுத்தல் வேண்டும். இல்லாவிடின் இறந்தவர் மரமாகப் பிறப்பார். ஆதாரம் அகோரசிவாச்சாரியார்பத்ததி, ஆஸௌசதீபிகை, கருட புராணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விருஷோற்சர்க்கம்:-**

காளைக்கன்று ஒன்றைத்தகுதியான பிராமணனுக்கு தானமாக அளித்தல். இதை ஒருவர்தான் வாழும் காலத்திலும் செய்யலாம். அல்லது இறக்கும் பொழுதாவது செய்யலாம். அல்லது அவர் இறந்தபின் அவரின் புத்திரர்கள் செய்யலாம்.

**சபிண்டீகரணம்:-**

இறந்தவருக்கு முன் மாண்ட அவரின் மூன்று தலைமுறையினரின் பிண்டத்துடன் இறந்தவரின் பிண்டத்தையும் ஒன்று சேர்ப்பது சபிண்டீகரணம். இதனால் இறந்தவரின் ஆவிபிரேதத்துவம் நீங்கப் பெற்று பிதிர்தேவர்களோடு சேர்ந்து கொள்வர். ஏழு வயதுக்கு மேல் வாழ்ந்து மரிப்பவர்களுக்கே பிரேரத்துவம் ஏற்படும் தன்மை உள்ளதால் ஏழு வயதுக்கு உட்பட்டவர்கள் மரித்தால் அவர்களுக்கு சபிண்டீகரணம் இல்லை. பிரேரத்துவம் பெற்ற ஆன்மாக்கள் மேலானசுவர்க்க லோகங்களுக்கும் போகாமல் இயமலோகத்துக்கும் போகாமல் மீண்டும் பிறப்பும் எடுக்காமல் அலைந்து கொண்டிருப்பர். இந்த ஆன்மாக்களுக்கு வைரவ கடவுளே தலைவர். வைரவ வழிபாடு இந்த ஆன்மாக்களின் நற்கதிக்கு உதவுவதுடன் இவைகளின் தீயசேட்டைகளையும் தடுக்கும்.

**தானம்:-**

தகுதியான அந்தணருக்கே தானம் செய்ய வேண்டும். வேதசாஸ்திரங்களைக் கற்றுணர்ந்த உத்தமரான அந்தணருக்கேதானம் கொடுக்க வேண்டும். அத்தகையவர்தான் தானம் பெற்ற பொருளின் தன்மையை அறிவார். அவ்வாறில்லாமல் வேதசாத்திரங்களைக் கற்றுணராத எவரும் பெயரளவில்பிராமணராக இருந்து நல்லொழுக்கம் இல்லாதவராகவும் இருந்தால்அவருக்கு அளிக்கும் தானம் எந்த விதபுண்ணியபலனையும் தராது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணம் தானம் பெற்றவர் தான் பெற்றபொருளின் தானச் சிறப்பு அறியமாட்டார். இது நற்பலனுக்கு மாறாக நரகத்தை அளித்துவிடும். தானம் வாங்குபவரும் தம்முடைய தகுதி அறிந்து வாங்க வேண்டும்.அவ்வாறு தகுதி இல்லாத ஒருவர்தானம் பெறுவாராயின் அவர்நரகம் புகுவதோடு, அவருடைய தலைமுறைகளுக்கும் நரக வாழ்வே கிடைக்கும். ஆதாரம் கருடபுராணம்.

இவ்வாறு தகுதி இல்லாமல் பெயர் அளவில் பிராமணராக இருந்து தானம் வாங்குபவர்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் மனசஞ்சலம், மனநோய், காரணம் காண முடியாத உடல் நோய்கள், குடும்ப உறவுகளில் பிரச்சினைகள், போன்ற பலவிதமான துன்பங்களில் ஆழ்ந்து அழுந்துவதை நாம் நாளும் நடைமுறை வாழ்க்கையில் காண்கிறோம். தானம் கொடுக்கும் பொருள் கொடுப்பவரின் தகுதிக்கு சிறந்ததாகவும் இருக்க வேண்டும். உள்ளதில் மலிவான பொருட்களையும், தரம் குறைந்த பொருட்களையும் தானம் என்ற பெயரில் கொடுப்பது பெரும் பாவம். தானம் வழங்கும் இடமும் நல்லதலமாக இருந்தால் சிறப்பு. இதனால் தான் பலர் புண்ணிய தலயாத்திரைகள் செய்யும் போது அத்தலங்களில் தானம் வழங்கும் வழமையைச் செய்கிறார்கள். தானம் வாங்குபவரும் உத்தமராக இருக்கவேண்டும். இவ்வாறு தானம் கொடுப்பவர் மனத் தூய்மையுடனும் என்னால் இதற்கு மேலும் இதனிலும் சிறப்பாகவும் கொடுக்க முடியவில்லையே என்ற மனோபாவத்துடனும் அமைந்து தானம் கொடுக்கும் பொருளும் கொடுப்பவரின் சக்திக்கு ஏற்பசிறப்பாகவும், தரமானதாகவும் அமைந்து கொடுக்கும் இடமும் நல்லதலமாக அமைந்து தானம் பெறுபவரும் உத்தமாரக அமைந்து விட்டால் கொடுக்கப்படும் தானம் கோடிபங்கு பலனைத்தரும்.

ஆதாரம் - **கருட புராணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

அன்னை மடியில்
1955 - 01 - 25



இறைவன் அடியில்
2018 - 06 - 13

வீரமுனையைப் பிறப்பிடமாகவும் கல்முனையை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர்.திருமதி. புவனேஸ்வரி விநாயகப்பிள்ளை

(ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர்)

அவர்கள் 2018.06.13 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்

அன்னார் விநாயகப்பிள்ளை (ஓய்வு பெற்ற கோட்டக்கல்விப் பணிப்பாளர், நாவிதன்வெளி) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற பொன்னையா ,கனகம்மா ஆகியோரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற ஆறுமுகம், சந்தணப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகளும், நடேதினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம், நாவிதன்வெளி), ரகுதாசன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், தக்சனன் (குடிசார் அத்தியட்சகர், இலங்கை மின்சார சபை, கிழக்கு மாகாணம்) அவர்களின் அன்பு மாமியாரும், ஹர்சித்தின் அன்பு அம்மம்மாவும், பரிமளவள்ளி, காலஞ்சென்ற நடராசா, வசந்தி, கமலநாதன் (அதிபர், வளத்தாப்பிட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை), பாரதிதாசன் (அதிபர், கமு/சது/கணேசா வித்தியாலயம், 7ம் கிராமம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், பரமேஸ்வரி, ஜினேந்திரன் (சமுர்த்தி முகாமையாளர் சமுர்த்தி வங்கி, பாண்டிருப்பு), பிரதட்சனி (ஆசிரியை கமு/சது/ கணேசா வித்தியாலயம், 7ம் கிராமம்), ஞானம்மா (ஆசிரியை, கமு/சது/ஸ்ரீ முருகன் வித்தியாலயம், மத்தியமுகாம்), சாந்தினி (ஆசிரியை, கமு/சது/அன்னமலை நாவிதன்வெளி மகா வித்தியாலயம்), சாந்தகுமார் (பொலிஸ் உத்தியோகத்தர் பொலிஸ் நிலையம், ஏறாவூர்) ஆகியோரின் பாசமிகு அண்ணியும், அமரர்.இராமநாதன் (முகாமையாளர்), வேலாயுதம் (ஓய்வு நிலை அதிபர்), பானுமதி, சிவவதனி (ஆசிரியை கமு/விவேகானந்தா தமிழ் வித்தியாலயம், கல்முனை), பிரபா (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம், கல்முனை த.பி), ஆகியோரின் பாசமிகு மச்சாளும், காலஞ்சென்ற கைலேஸ்வரன் (பொலிஸ் உத்தியோகத்தர்), பிரபாகினி, அற்புதராஜா (ஆசிரியர் கமு/சது /அன்னமலை நாதவிதன் வெளி மகா வித்தியாலயம்), மோகனராஜ் (விவசாய உதவியாளர் கமநல சேவைகள் காரியாலயம், பெரியநீலாவணை), மதிவண்ணன் (பொது சுகாதார ஆய்வு கூட தொழில் நுட்பவியலாளர்– அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை, கல்முனை) ஆகியோரின் உடன் பிறவா சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் 2018.06.14 வியாழக்கிழமை பி.ப 03.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு நற்பிட்டிமுனை பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல் அன்னாரின் குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் பிரிவால் வாடுகின்றோம்.

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 1955 | | 2018 |
| 01 | | 06 |
| 25 | | 13 |



## அமரர்.திருமதி.புவனேஸ்வரி விநாயகப்பிள்ளை

(ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர்)

பண்பின் உறைவிடமாய் பாசத்தின்
நிறைகுடமாய் மண்ணிலே பலர்மதிக்க
வாழ்ந்தது போதுமென்று விண்ணுலகம்
நோக்கியே விரைந்து சென்ற மாயமென்ன?

நீங்காத நினைவுகளை நிழலாட வைத்துவிட்டு
பாங்கான சொந்தங்களை
பாதியிலே தவிக்க வைத்து ஓங்கார
தத்துவத்தில் உறைந்து விட சென்றீரோ?

கனிவான புன்னகையும், கருணையான உங்கள்
முகமும், பனி போன்ற கண்ணசைவும்
பார்வையிலேயே மின்னுவதே
இனி உங்களை காண்பதெங்கே?

உரிமையுடன் பழகி வந்த உயர்வான உத்தமியே
உங்களை மறக்க முடியாமல் உளமார
அழுகின்றோம். பெருமையுடன் ஊரிலே வாழ்ந்தீர்கள்
உங்கள் பிரிவாலே துயருற்று வாடுகின்றோம்.

துயரில்பங்கு கொள்ளும்
கிறீன்லைற் விளையாட்டுக் கழகம்
மத்தியமுகாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

## அமரர்.திருமதி.புவனேஸ்வரி விநாயகப்பிள்ளை

## (ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர்)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1955 - 01 - 31 | 2018 - 06 - 13 |



அமைதியான புன்முறுவலுடன்
நகைச்சுவையை உன் தாரக மந்திரமாகக் கொண்டு
வலயத்தில் மனைப்பொருளியல் பாட ஆசிரியராக வலம் வந்த
ஆலவிருட்சம் சாய்ந்ததேனோ?

நற் தாரமாகவும் சிறந்த தாயாகவும்
நன்கறிந்து கற்றுத் தேர்ந்த ஆசானாகவும்
எவ்வேளையும் கோபமே வராத உன்
புன் முகத்திற்கு நிகரேதம்மா?

ஆசிரிய ஆலோசகராக வலம் வந்த வேளை
மனம் கோணாது வந்து
குறைகளையும் அன்பாக சுட்டிக் காட்டி
ஆசிரியர்களது மனதில் இடம் பிடித்தவரல்லவா...நீங்கள்

உங்கள் இடத்தை நிரப்புவதற்கு யாரம்மா உளர்?
மண்ணுலகில் பிறந்தவர் மாண்டுதான் ஆக வேண்டும்
எனும் கடவுளின் நியதிக்கேற்ப
இன்று எம்மை விட்டு பிரிந்து உம் பணியைத் தொடர இறைவனடி சேர்ந்து விட்டீர்!
எனினும் உமது ஆத்மா மோட்சவழி செல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள், பாடசாலை
அபிவிருத்திக்குழு
கமு/சது/நாவிதன்வெளி அன்னமலை ம.வி
நாவிதன்வெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

## அமரர்.திருமதி. புவனேஸ்வரி விநாயகப்பிள்ளை

(ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர்)

அன்னை மடியில்
25
-
01
-
1955



இறைவன் அடியில்
13
-
06
-
2018

காலவிருட்சம்
இது... வேரோடு சாய்ந்த போது
கண்ணீர்ப் பூக்களை
இன்று
காணிக்கையாக்குகின்றன

சந்தர்ப்பங்கள் தளர்வுறா உன்
நம்பிக்கை
எல்லாவற்றிலும்
உனது மறைந்த முகம்
மூடியகண்கள்
குவிக்கப்பட்ட கரங்கள்
மெழுகுவர்த்தியாய்
எங்கள்
தலைவாசல்களில்
உன்னையே
மீண்டும் மீண்டும்
வரவேற்கின்றன
எங்கள்
இதயங்களில் –நீ
ஏற்றப்பட்ட
அகல்விளக்கு
நீ அவ்வப்போது
செப்பும் மொழிகள்
ஒன்றா ... இரண்டா
இதயங்களில்
செதுக்கிய
சிற்பங்கள் அவை
அனுபவத்தின்
சாரல்கள்

அவை....
இனி நாட்காட்டிகள்
கிழிக்கப்படும் போது
நாள்கள்
எல்லாம்
உன்னையே ஞாபகப்படுத்தும்.

காலனின்
கணக்கெடுப்பில்
பதிவழிக்கப்பட்ட
நாட்கள் ஏராளம்.
பதிவுகளின்
பெட்டகம் – நீ
பாதுகாக்கப்பட
வேண்டிய
பொக்கிஷம் – நீ .....

சிவபதம்
சித்திக்க
இறைவனை
வேண்டுகின்றோம்.

அன்னாரது பிரிவால் துயரில் பங்கு கொள்ளும்
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும்
கல்விசாரா ஊழியர்கள்,
கமு/சது/வளத்தாப்பிட்டி அ.த.க.பாடசாலை, வளத்தாப்பிட்டி,
மல்வத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி.புவனேஸ்வரி விநாயகம்பிள்ளை

| மலர்வு | பொழுதொன்று சாய்வதற்குள் | உதிர்வு |
|---|---|---|
| 1955 | பொல்லாத ஓர் செய்தி | 2018 |
| 01 | மரணத்தில் நீங்கள் மடிந்ததனால் | 06 |
| 25 | இதயம் இடி கொண்டது அக்கணமே | 13 |

கல்விச் சேவைதனில்
சாதித்த பெரும் சேவகி
சேர்ந்து பழகிட நீங்கள்
மகத்தான உன்னத உத்தமி

உலக வாழ்வியலில் நல்ல
தலைவனை கரம் தொட்டு
சேவை செய்திடவே சேய்யொன்றை
எங்கள் செயலகம் தந்திட்ட தாயவளே

வானுலகம் உன்னை வரவேற்க
பூவுலகம் மறந்தே விரைந்தது
உங்கள் புனித ஆத்மா
ஆனாலும் ஆறமுடியவில்லை

ஆண்டுகள் பல கடந்து போகலாம்
ஆன போதும் மாறாது ஞாபகங்கள்
சீர் பெறட்டும் உங்கள் ஆத்மா
சிவனவன் பாதத்தில் பக்குவமாய்.

பிரதேச செயலாளரும், உத்தியோகத்தர்களும்
பிரதேச செயலகம்,
நாவிதன்வெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

**அமரர். திருமதி. புவனேஸ்வரி (பூங்கோதை) விநாயகப்பிள்ளை**

(ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர், சம்மாந்துறை கல்வி வலயம்)

மண்ணில்
25 - 01 - 1955



விண்ணில்
13 - 06 - 2018

மரணம் என்பது
எல்லோருக்கும் நிகழ்வது
போலவே இங்கும்,
இக்குடும்ப உறவிற்குள் நேர்ந்து விட்ட
ஒருசோகத்தின் சங்கடத்தில்
வார்த்தைகள் வராத தேடலில்
நினைவு சூழ் போர்வைக்குள்....
உறங்குதலும், விழித்தலும் போய்
மிகமிக இயல்பாகவே
இமைகள் இருளும் வரை
அன்பான பிணைப்புடனும்
உறவுகளுடனும்
முரண்கள் அற்ற சொந்தங்களுடனும்
வாழ்ந்து இவ்வுலகை விட்டு
நீங்காத் துயில் கொள்ளும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் துயரில் பங்கு கொள்ளும்
ஆசிரியர்கள், மாணவர்கள்
கமு/சது/கணேசாவித்தியாலயம், 7ம் கிராமம், சவளக்கடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நன்றி நவிலல்

எங்கள் குடும்பத்தின்
அன்புத் தெய்வம்
இறைபதமெய்தியதையொட்டிய இறுதி
நிகழ்விலே கலந்து கொண்ட
அனைவருக்கும் இதயபூவமான நன்றிகளை
தெரிவிக்கின்றோம். அவ்வகையில், இறுதி
நிகழ்வில் கலந்து கொண்டு இறுதி
மரியாதை, அஞ்சலி செலுத்தியவர்கள்,
விரைந்து வந்து ஆறுதல் கூறி அனைத்து
கடைமைகளையும்
மேற்கொண்டவர்களுக்கும்,
இறுதி ஊர்வலத்தில் கலந்து
கொண்டவர்களுக்கும், இரங்கலுரை
நிகழ்த்திய பெரியோர்களுக்கும்,
கண்ணீர் அஞ்சலி பதாதைகள், கண்ணீர்
அஞ்சலி பிரசுரம் வெளியிட்டு வழங்கிய
பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள்,
மாணவர்கள், நாவிதன்வெளி பிரதேச
செயலக உத்தியோத்தர்கள், மற்றும் கல்வி
அதிகாரிகள் மற்றும் இறுதி நாட்கள் வரை
ஆறுதல் அளித்த அனைவருக்கும், மற்றும்
அன்னம் வழங்கியவர்களுக்கும், இவ்
நினைவு மலருக்காக உள்ளன்போடு
ஆக்கங்கள் வழங்கியவர்களுக்கும், ஏனைய
அனைவருக்கும் நன்றிகளை
இதய பூர்வமாக தெரிவிக்கின்றோம்.

குடும்பத்தினர் சார்பாக
**யோ. தக்ஷனன்**
**(மருமகன்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ
அது நன்றாக நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய்
அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகும்.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.





- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -

விக்டரி அச்சகம், கல்முனை. 067-2223939

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org